**கவனிக்க**.- *11.11.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1733 - 2011 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2011.11.18

*1733 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1508 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1509 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1514 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2011, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

கொள்வனவு அறிவித்தல்

### தண்டவாளத்தின் குறுக்கே (Level Crossing) 200 பாதுகாப்பு அமைப்புக்கள் (Protection System) வழங்கி நிறுவுதல் கொள்வனவு இல. SRS/F.6919

இலங்கை புகையிரத சேவைகளுக்கு தண்டவாளத்தின் குறுக்கே (Level Crossing) 200 பாதுகாப்பு அமைப்புக்கள் (Protection System) வழங்கி நிறுவுதற்கு உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து முத்திரை குறியிடப்பட்ட விலை மனுக்களை, இலங்கை, கொழும்பு 01, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, போக்குவரத்து அமைச்சில், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழு தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

உற்பத்தியாளர்கள் தமது அற்றோணி அதிகாரத்தின்படி அதிகாரம் வழங்கிய பிரதிநிதிகள் மூலமும் விலைமனு கோரலாம்.

2. விலை மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் முடிவடையும் திகதி 2011.12.02 ஆந் திகதி (இலங்கை நேரப்படி) பி. ப. 2.00 மணியாகும்.

3. மீளளிக்கப்படாத கொள்வனவுக் கட்டணம் 10,000 இலங்கை ரூபாவை அல்லது இலகுவில் மாற்றத்தக்க நாணயத்தில் அதற்குச் சமமான தொகையைச் செலுத்துவதன் மூலம் 2011.10.21 ஆந் திகதி தொடக்கம் 2011.11.30 ஆந் திகதிவரை மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை (இலங்கை நேரம்) இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சர் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடிய படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீள் செலுத்தப்படாத குறிப்பிட்ட ரூபா 10,000 கட்டணம் அதற்கான மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயம் மூலம் மேற்குறிப்பிட்ட காலத்தினுள் அந்நாடுகளின் தூதுவராலய அலுவலகத்திற் செலுத்த முடியும் என்பதோடு, விலைமனு ஆவணங்கள் அத்தூதுவராலய அலுவலகத்தின் மூலமாகக் கிடைக்கப்பெற்ற இலங்கை புகையிரத களஞ்சிய அத்தியட்சர், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் கோரிக்கைவிட வேண்டும். குறிப்பிட்ட ரூபா 10,000 (வெளிநாட்டு நாணயமாற்றுத் தொகை) மீண்டும் செலுத்தப்பட மாட்டாது.

4. இலங்கை, கொழும்பு 10, இல. 1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, போக்குவரத்து அமைச்சில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் அல்லது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

5. முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை, பதிவஞ்சல் மூலம் அனுப்பவேண்டிய அல்லது நேரில் ஒப்படைக்கவேண்டிய முகவரி வருமாறு :-

தவிசாளர்,<br>
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழு,<br>
போக்குவரத்து அமைச்சு,<br>
இல. 1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,<br>
கொழும்பு 10,<br>
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை கட்டணமின்றி இலவசமாக, "இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சர் அலுவலகத்தில் பரிசீலிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் :

புகையிரத களஞ்சிய அத்தியட்சர்,<br>
புகையிரத களஞ்சிய திணைக்களம்,<br>
த. பெ. இல. 1347,<br>
ஒல்கொட் மாவத்தை,<br>
கொழும்பு 10,<br>
இலங்கை.

தொலைபேசி இல. : 94(11) 2438078 அல்லது<br>
94(11) 2436818<br>
தொலைநகல் இல. : 94(11)2432044.<br>
மின்-அஞ்சல் முகவரி : srs.sir@gmail.com

தவிசாளர்,<br>
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட<br>
கொள்வனவுக் குழு.

11-541

---

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்

### பேராதனை, ராஜரீகமான தாவரவியற் பூங்காவின் பிரதான நுழைவாயிலின் அருகே அமையப்பெற்றுள்ள பால் விற்பனைக் கூடத்தை ஒருவருட காலத்திற்கு (2012 ஆம் ஆண்டு) நடாத்திச்செல்வதன் பொருட்டு குத்தகைக்கு விடல்.

தேசிய தாவரவியற் திணைக்களத்திற்கு உரிய பேராதனை ராஜரீகமான தாவரவியற் பூங்காவின் பிரதான நுழைவாயலின் அருகே அமையப்பெற்றுள்ள பால் விற்பனைக் கூடத்தை ஒரு வருட காலத்திற்கு (2012 ஆம் ஆண்டு) நடாத்திச் செல்வதன் பொருட்டு பொருத்தமான குத்தகைக்காரரை தெரிவுசெய்யும் பொருட்டு பேராதனை தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம் (பேரளவில்) கேள்விச் சபைத் தலைவர் அவர்களினால் 2011, திசெம்பர் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிவரை தகைமையுள்ள குத்தகைக்காரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

2. குத்தகை ஆவணங்கள், நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் பேராதனை, இலக்கம் 1094, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமையப்பெற்றுள்ள தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பிரதான பணிமனையில் 2011, திசெம்பர் 09 ஆந் திகதி வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பொருட்டு மீளளிக்கப்படாத வைப்பான ரூபா 5,000 செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பொது 172 பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் பிரதிகள் 2 இனை பூரணப்படுத்தி (மூலப்பிரதி மற்றும் பிரதி) வெவ்வேறாக இரண்டு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குத்தகைப் படிவங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறைகளில் திறக்கக்கூடிய இடங்களை இறப்பர் இலச்சினையால் முத்திரையிடப்பட்டு அனுப்பிவைப்பது கட்டாயமாகும். அவ்வாறே கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பேராதனை ராஜரீகமான தாவரவியற் பூங்காவின் பிரதான நுழைவாயலின் அருகே அமையப்பெற்றுள்ள பால் விற்பனைக் கூடத்தை நடாத்திச் செல்லல்'' எனும் வாசகம் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும். மூலப்பிரதியை அனுப்பிவைக்கும் கடித உறையின் முன்பக்கத்தில் ''மூலப்பிரதி'' எனும் சொற்றொடர் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

4. விலைமனுக்களை ''தலைவர், கேள்விச்சபை (பேரளவில்), தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 14, பேராதனை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையேல் நேரடியாக திணைக்களத்திற்கு வருகை தந்து விலைமனுக்களை இடுவதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடலாம். தாமதித்து கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

5. 2011, திசெம்பர் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு விலை மனுக்கள் பெற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் அத்துடன் விலை மனுக் கோரல்கள் பெற்றுக்கொள்வதனை முடிவுறுத்தப்பட்டவுடனே விலைமனுக்கள் திறக்கின்ற சபை முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அதன் பொருட்டு விலைமனுக் கோருவோர் அல்லது அவர்களது அதிகாரத்தைப் பெற்றுள்ள பிரதிநிதி ஒருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் பங்குகொள்ள முடியும்.

6. விலைமனு ஆவணங்களுடன் ரூபா 2,00,000 பெறுமதியான 90 நாட்களுக்கு ஏற்புடைய ஒப்பந்தம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் அல்லது காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தங்கள் சமர்ப்பிக்காத விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப் படாது நிராகரிக்கப்படும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

7. தகைமையுள்ள குத்தகைக்காரரை தெரிவுசெய்வது தொடர்பில் முழுமையான உரிமை திணைக்களத்தின் (பேரளவிலான) விலைமனுக் கோரல் சபைக்கு உரியதாகும். அதன் பொருட்டு எவ்விதத்திலேனும் அதிகாரம் செலுத்துவதானது தெரிவுசெய்வதன் பொருட்டு தகைமையை கொண்டில்லை எனக் கருத்திற்கொள்ளப்படும். இந்த விலைமனுக் கோரல் அறிவித்தல் மற்றும் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப் படாத எந்த ஒரு விடயம் தொடர்பிலும் தீர்மானம் மேற்கொள்வதற்கான சகல உரிமையும் தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். இது தொடர்பில் மேலதிக தகவல் பெற வேண்டுமாயின் 081-2388654 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இத்திணைக்களத்தின் பணிப்பாளர் (நிதி) இடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்களத்தின் விலைமனுக் கோரல் சபை
(பேரளவில்).

தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்,
பேராதனை.
2011, நவெம்பர் 02.

11-415

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 12/5, புனித மைக்கல் றெசிடென்சி, அல்பிரட் ஹவுஸ், கார்டன், கொழும்பு 3 இல் வசித்தவரும் தற்போது ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் இலினொய் 60521, பறிஜ், இலக்கம் 8532, வெட்ஜ்வுட் டிரைவ் இல் வசிக்கும் மோகன்லால் ரஞ்சித் விக்கிரமசிங்க ஆகிய நான், இலினொய்ச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு செஸ்ரின் நொவாக் அவர்களால் 27, ஒற்றோபர் 2010 ஆந் திகதி எழுதப்பட்டு என்னால் இலக்கம் 339/2/எல், அறவ்வள, பன்னிப்பிட்டியவில் வசிக்கும் ரத்நாயக்க முதியன்சலாகே ஜனதின காஞ்சனா குமாரி உடுவயறகெதர என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நாட்குறிப்பு புத்தகம் 766 இல் பக்கம் 65, புத்தகம் 29 இல் பதிவுசெய்யப்பட்டது. அதை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாசையின் பேரிலும் இத்தால் இரத்துச்செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

இதன்பின் மேற்படி 12 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை பயன்படுத்தி இவ் அற்றோணித் தத்துவத்தை வழங்கிய மோகன்லால் ரஞ்சித் விக்கிரமசிங்க இனாலோ அல்லது அவர் சார்பாக கொழும்பு 4, மக்லியொட் றோட், 12 ஆம் இலக்க விலாசத்தைக் கொண்ட லவன்ற் எஸ்ட்டேட் லிமிட்டெட் என்னும் கம்பனியாலோ புரியப்படும் எவ்வகையான செயல்களுக்கும் நான் பொறுப்பாளியில்லை என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

ரத்நாயக்க முதியன்சலாகே ஜனதின காஞ்சனா
குமாரி உடுவயறகெதர.

11-297

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம்.-

கம்பனியின் பெயர் : 13ஜீ, கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 80988
பதிவுத் திகதி : 2011.08.30
பதிவு முகவரி : இல. 289/42, நாமல் பிளேஸ், கிரிபத்கொடை

சபையின் கட்டளைப்படி,

அன்டன் ஷிஹான் திலங்க ஜோசப் டி சில்வா,
கம்பனிச் செயலாளர்.

11-342

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம்.-

கம்பனியின் பெயர் : எல்பிட்டிய டீ பெக்டரி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 81237

*பதிவுத் திகதி* : 2011.09.13
*பதிவு முகவரி* : எல்பிட்டிய எஸ்ட்டேட், வெலிகல்ல

குரூப் மெனேஜ்மென்ட் அன்ட் செக்ரடேரியல்
சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

11-348

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) விதிகளின்கீழ் பின்வரும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(1) *கம்பனியின் பெயர்* : ப்ரோக்ரஸ் மெட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்
(2) *கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2011.10.24
(3) *கம்பனியின் இலக்கம்* : பீவீ 82067
(4) பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 33-3/4, கின்ரோஸ் அவெனியூ, கொழும்பு 4

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 67, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

11-346

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) விதிகளின்கீழ் பின்வரும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(1) *கம்பனியின் பெயர்* : என். எம். ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
(2) *கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2011.10.24
(3) *கம்பனியின் இலக்கம்* : பீவீ 82088
(4) பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 11, அலெக்செண்ட்ரா வீதி, கொழும்பு 6

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 67, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

11-347

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 3, எம் 3, தேசிய வீடமைப்புத் திட்டம், கிரிபத்கொட முகவரியில் வசிக்கும் ஹொரதல்கே விக்டர் ஜயதிலக்க ஆகிய நான், 2008.05.31 ஆந் திகதியன்று சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு பி. எஸ். டீ. பி. பெரேரா மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 275, விசேட தத்துவத்திற்காக இல. 3, எம் 3, தேசிய வீடமைப்புத் திட்டம், கிரிபத்கொட முகவரியில் வசிக்கும் திரிஸ் பத்மா ரெஸ்டா வீரகோன் என்பவரை சட்டபூர்வ அற்றோணி அதிகார தத்துவகாரராக நியமித்திருந்தேன். அதற்கிணங்க அந்த அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்வதாகவும் இதனால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் செல்லுபடியற்றதாகும் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எச். விக்டர் வீரகோன்.

11-343

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : பாஷா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 82025
*பதிவுத் திகதி* : 2011.10.20
*பதிவு முகவரி* : சஸ்மித், அத்பந்திய வீதி, குடாபயாகல, பயாகல

11-300

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட அறிவித்தல்

கொம்பி ஹெல்த் கெயா புரடக்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பீ. வீ. 82008*

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்படி மேற்படி கம்பனியானது 2011, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு, இல. 16/20, கோல்பேஸ் கோட் 3, கொழும்பு 2 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பீ. டி. ஓ. செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 65/2, சேர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 2.

11-299

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : ஜே. எம். எஸ். குரூப் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 82048
பதிவுத் திகதி : 2011.10.21
பதிவு விலாசம் : மெயின் வீதி, ஒரப்பத்தான

பினான்சியல் அன்ட் பிசினெஸ் அசோசியேட்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

11-373/1

---

## கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்.-

கம்பனியின் முன்னைய பெயர் : ஓ. வீ. எஸ். செஸிஸ் சென்டர் (பிறைவேட்) லிமிட்டெட்
நிறுவனத்தின் பதிவு இலக்கம் : பீவீ 79250
கம்பனியின் பதிவு முகவரி : இல. 453/1, ஹவ்லொக் வீதி, கொழும்பு 6
கம்பனியின் புதிய பெயர் : அட்டே குரூப் இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்

பினான்சியல் அன்ட் பிசினெஸ் அசோசியேட்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

11-373/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் உறுப்புரை 9(1) இன்கீழ் இத்துடன் விபரிக்கப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.-

கம்பனியின் பெயர் : மொனார்ச் பிரிண்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 81864
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.10.13
பதிவுபெற்ற அலுவலகம் : இல. 272/ஏ, ஹைலெவல் வீதி, மகரகம

எச். ஏ. இ. விஜேசிங்க,
கம்பனிச் செயலாளர்கள்.

11-349

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின்படி சுயவிருப்பின் பேரில் செய்யப்படும் மனமொப்பிய ஒடுக்கல்

ஓசன் ஃபீட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(பீவீ 7730)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 144(1) ஆம் பிரிவின் பிரகாரம் எழுத்திலான தீர்மானமொன்று 2011 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 4 ஆந் திகதி கம்பனியின் பங்குதாரர்களின் கூட்டத்தில் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தீர்மானம் கம்பனியின் சகல பங்குதாரர்களினாலும் கையொப்பமிடப்பட்டு இயற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.-

"கம்பனியானது சுயவிருப்பத்தின் பேரில் ஒடுக்கப்பட வேண்டுமெனவும் கொழும்பு 6, ஸ்டேசன் வீதி உட்புறமாக, ரஞ்சன் வீதி, 2ஏ-1/1 இல் திரு. எஸ். பி. கஜேந்திரா ஒழித்துக்கட்டுநராக நியமிக்கப்பட வேண்டும் எனவும்"

ஈஎம் அன்ட் ஈஎன் ஏஜன்ட்ஸ் அன்ட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம் (தளம் 5),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 03.

11-377/1

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழித்துக்கட்டுநரை நியமிக்கும் அறிவித்தல்

ஓசன் ஃபீட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(பீவீ 7730)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 144(1) ஆம் பிரிவின் பிரகாரம் எழுத்திலான தீர்மானமொன்று 2011 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 4 ஆந் திகதி கம்பனியின் பங்குதாரர்களின் கூட்டத்தில் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தீர்மானம் கம்பனியின் சகல பங்குதாரர்களினாலும் கையொப்பமிடப்பட்டு இயற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.-

"கம்பனியானது சுயவிருப்பத்தின் பேரில் ஒடுக்கப்பட வேண்டுமெனவும் கொழும்பு 6, ஸ்டேசன் வீதி உட்புறமாக, ரஞ்சன் வீதி, 2ஏ-1/1 இல் திரு. எஸ். பி. கஜேந்திரா ஒழித்துக்கட்டுநராக நியமிக்கப்பட வேண்டும் எனவும்"

திரு. எஸ். பி. கஜேந்திரா,
ஒழித்துக்கட்டுநர்.

2ஏ-1/1, ரஞ்சன் வீதி,
ஸ்டேசன் வீதி உட்புறமாக,
கொழும்பு 06.

11-377/2

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர்* : அம்மு பியுட்டி கெயா அண்ட் அகடமி (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 82184

*கம்பனியின் விலாசம்* : இல. 66ஏ, புகையிரத வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா

மு. புஸ்பராஜ்,
கம்பனிச் செயலாளர்.

11-448

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கனடா கே2எல் 2ரி5 ஒன்டாரியோ, ஒட்டாவா, கௌரி டிரைவ், 61 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த விசித சிரின் லீலாரட்ன ஆகிய நான், இலங்கை, அம்பலாங்கொடை, செரமினிய, இல. 7/17, லுஷான் சமிந்த வடுதந்திரி என்பவருக்கு வழங்கப்பட்ட கனடா, ஒன்டாரியோ பகிரங்க நொத்தாரிசு புலூசி எப் சிம்சன் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2010, மே 17 ஆந் திகதிய அற்றோணி தத்துவத்தை 2011, யூலை 11 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் என இத்தால் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் அறிவிக்கிறேன்.

விசித சிரின் லீலாரட்ன.

1556,
433 கியூ, காலி வீதி,
இரத்மலானை.

11-420

---

## அற்றோணித் தத்தவத்தை இரத்துச் செய்தல்

மொறட்டுவை, கட்டுபெத்தை, ராஹுல மாவத்தை, இல. 20 ஐச் சேர்ந்த கயா கனிஷ்க ஜயசிங்ஹ ஆகிய நான், மொறட்டுவை, கட்டுபெத்தை, ராஹுல மாவத்தை, இல. 20 ஐச் சேர்ந்த லக்ஷி பிலான வித்தான என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு பீ. ஜீ. ஞானசிறி சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 10 மே, 2007 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவ இல. 2068 ஐ உடனடி பயனுறும் வகையில் இத்தால் இரத்துச்செய்து இல்லாதொழிக்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன். அத்துடன் இதன் பின்னர் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின்கீழ் புரியப்படும் எவ்வித செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் வெளிப்படுத்துகிறேன்.

கயான கனிஷ்க ஜயசிங்ஹ.

11- 421

## பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படும் அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர்* : லங்கா ஸ்டொக் கனெக்ட் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 81919

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : ஒஸ்ட்ரேலியன் மைக்ரேஷன் கன்சல்டன்ட்ஸ் மேற்பார்வையின்கீழ், கீழ்மாடி, சினமன் லேக் சைட், இல. 115, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை

*பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2011.10.19

*கம்பனி செயலாளரின் பெயர் மற்றும் முகவரி* : சி. எஸ். என். டி சில்வா சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு மற்றும் கம்பனிச் செயலாளர், இல. 680, நாயக்க வீதி, கட்டுநாயக்க

*தொலைபேசி இல.* : 0772994800

11-469

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட சரத்து 286(1) இன்கீழான ரன் மலு பாஷன் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனியின் தற்காலிக கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. பீவீ 2258

*கம்பனியின் பெயர்* : ரன் மலு பாஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 3, புல்லர்ஸ் லேன், கொழும்பு 7

*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)

*வழக்கு இலக்கம்* : எச்சீ (சிவில்) 50/2011/சீஓ

*தற்காலிக கம்பனி கலைப்பாளர்களின் பெயர்* : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட், ப்ரொவிஷனல் லிக்குடேடர்ஸ்

*முகவரி* : மே./பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4

*நியமனத் திகதி* : 2011.10.28

11-468

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை செல்லுபடியற்றதாக்கல்

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பிலிமத்தலாவ போனகே வளவ்வையில் தற்போது நாவல கொஸ்வத்த தம்மிக்க உபாசக்கராமய மாவத்தை, இலக்கம் 48/4 இல் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இலக்கம்

321400922வீ ஐக் கொண்ட ஜயசந்திர போனகே ஆகிய நான், கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆனந்த குமார ஹேரத் அவர்களினால் இலக்கம் 30, 2008.03.24 ஆந் திகதி எழுதி, தினக்குறிப்பு இல. 956, பக்கம் 5, புத்தக இலக்கம் 33 இல் பதிவுசெய்யப்பட்ட விசேட அற்றோணி பத்திரத்தினூடாக இல. 353/7ஏ, மாவில்மட, கண்டியில் வசிக்கும் வாசல முதியான்சலாகே வலகெதற அபேரட்ன பண்டா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 481840323வீ) என்பவருக்கு கொடுக்கப்பட்ட அனைத்து அங்கீகாரத்தையும் இது முதல் இரத்துச்செய்தும் அதிகாரமற்றதாக்கியும் உள்ளேன். அவ் அற்றோணிகாரரால் இதன் பிற்பாடு மேற்கொள்ளப்படும் எந்தவொரு விடயத்திற்கும் என்னால் பொறுப்பு ஏற்கப்பட மாட்டாது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜயசந்திர போனகே.

11-564

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை செல்லுபடியற்றதாக்கல்

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பிலிமத்தலாவ போனகே வளவ்வையில் தற்போது நாவல, கொஸ்வத்த தம்மிக்க உபாசக்கராமய மாவத்தை, இலக்கம் 48/4 இல் வசிக்கும், (தேசிய அடையாள அட்டை இலக்கம் 321400922வீ) ஐக் கொண்ட ஜயசந்திர போனகே ஆகிய நான், குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஹப்புவின்ன கஜநாயக்க நவரட்ன கஜநாயக்க அவர்களினால் இலக்கம் 739, 2008.12.10 ஆந் திகதி எழுதி பதிவுசெய்யப்பட்ட அற்றோணி பத்திரத்தினூடாக இல. 353/7ஏ, மாவில்மட, கண்டியில் வசிக்கும் வாசல முதியான்சலாகே வலகெதற அபேரட்ன பண்டா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 491840323வீ) என்பவருக்கு கொடுக்கப்பட்ட அனைத்து அங்கீகாரத்தையும் இது முதல் இரத்துச்செய்தும் அதிகாரமற்றதாக்கியும் உள்ளேன். அவ் அற்றோணிகாரரால் இதன் பிற்பாடு மேற்கொள்ளப்படும் எந்தவொரு விடயத்திற்கும் என்னால் பொறுப்பு ஏற்கப்பட மாட்டாது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜயசந்திர போனகே.

11-563

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை செல்லுபடியற்றதாக்கல்

வல்பிட்ட, "நயன", ஹீரலுகெதற, இல. 242 இல் வசிக்கும் தற்போது பங்களாதேசத்தில் இருக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 760042005வீ ஐக் கொண்ட சுபசிங்க ஆராச்சிலாகே ஜகத் இந்திக்க சுபசிங்க ஆகிய நான், பங்களாதேசம், டாக்கா குல்ஷானில் இருக்கும் இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தைச் சேர்ந்த ஜே. ஆரியரட்ன அவர்களினால் 2009.12.02 ஆந் திகதி எழுதி, பதிவுப் புத்தகம் இல. 693, பக்கம் 52 தொகுதி 45 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள விசேட அற்றோணி பத்திரத்தினூடாக மிரிஸ்வத்த, கடபுவன றோட், 8 ஆம் ஒழுங்கை, இல. 411 இல் வசிக்கும் சுபசிங்க ஆராச்சிலாகே சந்யா சுபசிங்க சிறிவர்தன (தேசிய அடையாள அட்டை இலக்கம் 628121397வீ) என்பவருக்கு கொடுக்கப்பட்ட அனைத்து அங்கீகாரத்தையும் இது முதல் இரத்துச்செய்தும் அதிகாரமற்றதாக்கியும் உள்ளேன். அவ் அற்றோணி காரரால் இதன் பிற்பாடு மேற்கொள்ளப்படும் எந்தவொரு விடயத்திற்கும் என்னால் பொறுப்பு ஏற்கப்பட மாட்டாது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுபசிங்க ஆராச்சிலாகே ஜகத் இந்திக சுபசிங்க.

11-562

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : சுனந்த ஒட்டோ (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 80859
பதிவுத் திகதி : 2011.08.24
பதிவு முகவரி : இல. 397, கம்ஸபா சந்தி, ஹைலெவல் வீதி, நுகேகொடை

சபையின் கட்டளைப் பிரகாரம்.

11-557

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றைக் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி கீழே குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டமையைப் பற்றிய அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : என் கெப்பிட்டல் (பீவீர்) எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீவீ 81749
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.10.07
பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி : இல. 90, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 7

கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி. டபிள்யு. கோர்ப்பரேட் செக்ரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2011.10.18.

11-558/1

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242(3) (பி) இன்படி இல. 476, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 இல் பதிவுசெய்யப்பட்ட விலாசமாகக் கொண்ட காமனி அன்ட் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீ. வீ. 5048) மற்றும் நிமாலி அன்ட் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீ. வீ. 5047) இவ்விரு கம்பனிகளும் ஒன்றிணைந்து காமனி அன்ட் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என பதிவுசெய்யப்பட்ட விலாசமான இல. 476, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 இல் எதிர்கால வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது என அறியத்தருகிறோம்.

11-550

---

### பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றைக் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி கீழே குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டமையைப் பற்றிய அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : என் ஸ்போர்ட்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீவீ 81750
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.10.07
பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி : இல. 90, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 7

கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி. டபிள்யூ. கோர்ப்பரேட் செக்ரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2011.10.18.

11-558/2

---

## ஏல விற்பனைகள்

### செலான் வங்கி பீ.எல்.சீ. – மகரகம கிளை மற்றும் கூட்டுறவு வங்கிக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

#### முதலாம் ஏல விற்பனை

**கொழும்பு மாவட்டத்தில் மகரகம பொல்வத்தையில் அமைந்துள்ள "முனமல்கஹாவத்த, ஹெட்டகெலகஹாவத்த மற்றும் அலுபோ கஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். டீ சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்டு 1993.10.07 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 10851- துண்டு 3 என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணி, பதினேழு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் நில வரைபட இல. 10851 இன் தெல்கந்த காணிப்பதிவகத்தில் தலைப்பு எம்1998/88 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**மேற்கூறப்பட்ட நிலவரைபடத்திற்கமைய துண்டு 5 மற்றும் துண்டு 1 பொது விதிக்கு அமைய துண்டு உரிய முறையில் அதன் மீதும் அதனூடாகவும், தெல்கந்த காணிப்பதிவகத்தில் தலைப்பு எம்1995/114 மற்றும் பதிவிலக்கம் எம்1998/200பீ இன்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

**பொது விதிமுறைகளுக்கமையவும் உரிய முறையில் நில வரைபட இல. 10851-பன்னிரண்டு அடி அகலத்தில் (வீதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.) துண்டு 1 ஐ இணைத்து வீதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.**

*("கடன்பட்டோர்" என்ற வகையில் கொட்டாவை வியாபார பதிவிலக்கம் டபிள்யூ 43183 ஐக் கொண்டுள்ள "குமுது என்டபிரைசஸ்" என்ற பெயர் வடிவில் வியாபார விற்பனை நிறுவனத்தின் உரிமையாளரான துஷான் ரெட்னபால மாபட்டுன என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்ட காணியை நான் அதே இடத்தில் 2011, திசெம்பர் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** மகரகம நகரத்திலிருந்து பமுனுகம வீதி மார்க்கமாக பமுனுகம சந்திவரை சென்று வலதுபக்கமாக உள்ள பொல்வத்த செல்லும் வீதியால் 1.5 கி. மீ. சென்று வலதுபக்கமாக உள்ள கிராம சன்வர்தன மாவத்தையால் (டெம்பிளிற்கு அருகாமையில்) சுமார் 150 மீ. சென்று இடதுபக்கமாகத் திரும்பிவரும் முறையான வளைவில் வரும் 12 அடி அகலமான பாதையால் சுமார் 75 மீற்றர் வரை சென்று வலதுபுறமாகத் திரும்பி கிரவல் வீதியால் சுமார் 50 மீற்றர் தூரத்தில் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதி முடிவடையமுன் உள்ள பகுதியில் அமைந்திருக்கும்.

#### இரண்டாம் ஏல விற்பனை

**கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகமவில் பிரஃமன்கமவில் அமைந்துள்ள "அன்டரகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. டீ. பிரேமரட்ன என்பவரால் தயாரிக்கப்பட்டு 1995.02.21 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1254ஏ- துண்டு ஏ1 என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணி, நிலவரைபட இல. 1254ஏ, இரண்டு றூட் இருபத்தாறு தசம் ஆறு சைபர் பேர்ச் சுக்கள் (0ஏ. 2றூ. 26.60பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

**மேற்கூறப்பட்ட ஏ1 நிலவரைபட இல. 1254ஏ காணித்துண்டுடன் இணைந்த பகுதி கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :**

**கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகமவில் பிரஃமன்கமவில் அமைந்துள்ள அன்டரகஹாவத்த என்று அழைக்கப்படுகின்ற**

**காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி. ஏ. எஸ். ஏ. குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்டு 1994.02.20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 196 துண்டுகள் 5எப், 5ஜீ, 5எம், 5எச், 5ஜே, 5கே மற்றும் 10ஏ என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணிகள், பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 12.5பே.), பதினேழு தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 17.5பே.), ஒன்று தசம் எட்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 1.8பே.), பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) பன்னிரண்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 12பே.) பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) முறையே விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் நிலவரைபட இல. 196- ஹோமாகம காணிப்பதிவகத்தில் தலைப்பு ஜீ894/241-ஜீ894/243, ஜீ894/264-ஜீ894/267 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

**அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ. டபிள்யூ. அபயசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 1993.12.12 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4700 துண்டு 5ஈ மற்றும் நிலவரைபட இல. 196 துண்டு 5ஐ- அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி. எச். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்டு 1993, மார்ச 9 மற்றும் 20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 604 இல் துண்டு 6 ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜீ894/220, ஜீ894/216 மற்றும் ஜீ927/112 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

*மேலே விவரிக்கப்பட்ட காணியை நான் அதே இடத்தில் 2011, திசெம்பர் 12 ஆந் திகதி மு. ப. 11.15 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.*

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** *கொட்டாவயிலிருந்து ஹொரண வீதி மார்க்கமாக 3 ஆம் கி. மீ. போஸ்ட் இன் வலதுபக்கமாகவுள்ள பெபிலியாவெல வீதியால் வரும் தார் வீதியால் 300 மீ. சென்று வலதுபுறமாகத் திரும்பி சுமார் 200 மீ. சென்று இடதுபக்கமாகவுள்ள 20 அடி கிரவல் பாதையால் சுமார் 75 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலதுகைப் பக்கத்தில் மோட்டார் வாகனம் செல்லக்கூடிய பாதையில் அமைந்திருக்கும்.*

### மூன்றாம் ஏல விற்பனை

**கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகமவில் பிரஃமன்கமவில் அமைந்துள்ள "அன்டரகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ. டபிள்யூ. அபயசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 1993, திசெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4600- துண்டு 5பி என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணி, பத்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் நிலவரைபட இல. 4600 ஹோமாகம காணிப் பதிவகத்தில் தலைப்பு ஜீ894/291 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**மேற்கூறப்பட்டவாறு வழிமுறை உரிமை அதன் மீதும் அதனூடாகவும், நிலவரைபட இல. 4600 துண்டு 5ஈ (வீதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது).**

**அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி. எச். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்டு 1993, மார்சு 19 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 604 துண்டு 6 (10.5 அடி அகலத்தில் வீதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது).**

*மேலே விவரிக்கப்பட்ட காணியை நான் அதே இடத்தில் 2011, திசெம்பர் 12 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.*

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** *கொட்டாவயிலிருந்து பிலியந்தல வீதி மார்க்கமாக மாட்டேகொட வீதி வரை பயணம் செய்து பின் மாட்டேகொட வீதியால் ஹொரண வீதியை சந்திக்கலாம். ஹொரண வீதியின் இடதுபக்கமாக திரும்பி டொலே கடை சந்திவரை பயணம் செல்லவும். பின் ஹொரண வீதியில் இருந்து சுமார் 3 கி. மீ. போஸ்ட் வரை செல்லவும். அங்கிருந்து வலதுபக்கத்திலுள்ள பிபிலியாவெல வீதியால் சுமார் 400 யார் சென்று பின் இடதுபக்கமாக உள்ள வீ. சீ. வீதியால் 250 யார் செல்லவும். இறுதியாக இடதுபக்கத்திலுள்ள தனியார் வீதியால் சிறிது தூரம் சென்றால் குறிப்பிட்ட இடத்தை அடையலாம்.*

### நான்காம் ஏல விற்பனை

**(1) கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம மபுல்கொடவில் அமைந்துள்ள "அன்டரகஹாவத்த அல்லது தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 1999, ஏப்பிறல் 9 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4571- துண்டு 2 என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணி, பதினொரு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் நிலவரைபட இல. 4571 ஹோமாகம காணிப் பதிவகத்தில் தலைப்பு ஜீ815/22 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**(2) மபுல்கொடவில் அமைந்துள்ள "அன்டரகஹாவத்த அல்லது தவட்டகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற நிலவரைபட இல. 4571- துண்டு 3 என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணி, பதினொரு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் நிலவரைபட இல. 4571 ஹோமாகம காணிப்பதிவகத்தில் தலைப்பு ஜீ815/21 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

*மேலே விவரிக்கப்பட்ட காணியை நான் அதே இடத்தில் 2011, திசெம்பர் 12 ஆந் திகதி மு. ப. 11.45 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.*

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** *கொட்டாவயிலிருந்து பிலியந்தல வீதி மார்க்கமாக மாட்டேகொட வீதி வரை பயணம் செய்து பின் மாட்டேகொட வீதியால் ஹொரண வீதியை சந்திக்கலாம். ஹொரண வீதியின் இடதுபக்கமாக திரும்பி டொலே கடை சந்திவரை பயணம் செல்லவும். பின் ஹொரண வீதியில் இருந்து சுமார் 3 கி. மீ. போஸ்ட் வரை செல்லவும். அங்கிருந்து வலதுபக்கத்திலுள்ள பிபிலியாவெல வீதியால் சுமார் 400 யார் சென்று பின் இடதுபக்கமாக உள்ள வீ. சீ. வீதியால் 250 யார் செல்லவும். இறுதியாக இடதுபக்கத்திலுள்ள தனியார் வீதியால் சிறிது தூரம் சென்றால் குறிப்பிட்ட இடத்தை அடையலாம்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** *2010.06.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2010.06.17 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் 2010.06.23 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.*

**கட்டணம் செலுத்தும் முறை.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

*(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கும் மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகார சபை வரி விதிகளுக்குமமைய ஒரு வீதம் (1%) உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்பட வேண்டும் ;*

(3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்யப்படல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., இல. 90, சிலிங்கோ செலான் கோபுரம், காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456276, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 011-3068185, 2572940.

11-551

---

**டிஎப்சீசீ வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஏல விற்பனை**

**விற்பனை 1**

**13748 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

1. **வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்து, வல்கம்பத்து கோரளே, மஹகெலிய கிராமத்தில் அமைந்துள்ள கந்தேவத்த என அழைக்கப்படும் அனுமதிப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எச். எம். எஸ். ஹேரத் அவர்களால் வரையப் பட்ட 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 8 ஆந் திகதியிடப்பட்ட 3808ஏ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப் பட்டதுமான காணித் துண்டு- அங்கு அமைந்துள்ளதும் அதற்கு உரித்துடையதுமான மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரைபடத்தில் துண்டு 4 இல் காட்டப்பட்டுள்ள வீதியைப் பாவிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 3றூ. 20பே.)**

2. **இங்கு குறிப்பிடப்படும் மஹகெலிய கிராமத்தில் அமைந்துள்ள கந்தேவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் எச். எம். எஸ். ஹேரத் அவர்களால் வரையப் பட்ட 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 8 ஆந் திகதியிடப்பட்ட 3808ஏ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு- அங்கு அமைந்துள்ளதும் அதற்கு உரித்துடையதுமான மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரைபடத்தில் துண்டு 4 இல் காட்டப்பட்டுள்ள வீதியைப் பாவிக்கும் மற்றும் பராமரிக்கும் உரிமையுடன்**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 3றூ. 0பே.)**

**விற்பனை 2**

**3370 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்து, வல்கம்பத்து கோரளே, மஹகெலிய கிராமத்தில் அமைந்துள்ள கந்தேவத்த என அழைக்கப்படும் அனுமதிப் பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. அத்தபத்து அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 3 ஆந் திகதியிடப்பட்ட 156/2005 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு- அங்கு அமைந் துள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்க லாக**

**(காணியின் விஸ்தீரணம் : 4ஏ. 0றூ. 0பே.)**

**விற்பனை 3**

**3371 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

1. **கீழே விபரிக்கப்பட்டுள்ள அனைத்து அசையும் இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் :**

| விபரம் | அளவு |
|---|---|
| லேத் மெஷீன் (வகை-ஜவகி) தொடர் இல. 7ஏ 1000 | 01 |

**தற்போது மாஸ்பொத்தயில் உள்ள அனைத்து உதிரிப் பாகங்களும், துணைப்பொருட்களும் அதற்குச் சொந்தமான ஏனைய சகல களஞ்சியங்கள் மற்றும் குதங்களிலுமுள்ள அனைத்தும்.**

**13749 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

2. **கீழே விபரிக்கப்பட்டுள்ள அனைத்து அசையும் இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் :**

| விபரம் | அளவு |
|---|---|
| ஷேப்பிங் மெஷீன் (வகை-அயிஸாவா ஷியர்ஸ்) | 01 |

**தற்போது மாஸ்பொத்தயில் உள்ள அனைத்து உதிரிப் பாகங்களும், துணைப்பொருட்களும் அதற்குச் சொந்தமான ஏனைய சகல களஞ்சியங்கள் மற்றும் குதங்களிலுமுள்ள அனைத்தும்.**

**14775 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**3. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்து, வல்கம்பத்து கோரளே, கெலிமுனேயில் அமைந்துள்ள அம்பலன்பிட்டியஹேன எனவும் பொரலுவெலஹேன எனவும் அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் பீ. பி. திசாநாயக்க அவர்களால் வரையப்பட்ட 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 4984 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு- அதிலுள்ள மற்றும் அதற்குச் சொந்தமான கட்டிடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 3றூ. 0பே.)**

*(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ரீ. எஸ். ஐ. வெத்தேவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 3371 ஆம் இலக்க பிணை உறுதிகள், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. வந்துரகல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 13748 மற்றும் 13749 ஆம் இலக்க பிணை உறுதிகள் மற்றும் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. வந்துரகல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட 14775 ஆம் இலக்க பிணை உறுதி ஆகியன மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த இல. என் (பீவீஎஸ்) 28696 எனப் பதிவுசெய்யப்பட்ட மாஸ்பொத்தயில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட ஸ்பெக்ரா இண்டஸ்ரீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் டிஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டிஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணி, மு. ப. 11.45 மற்றும் பி. ப. 1.00 மணிக்கு முறையே எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) ;
(4) ஒவ்வொரு விற்பனைக்கும் தலா 30,000 ரூபா விளம்பர கட்டணம் அறவிடப்படும் ;
(5) இலிகிதர் மற்றும் நீதிமன்ற அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ஒவ்வொரு விற்பனைக்கும் அறவிடப்படும் ;
(6) நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000 ஒவ்வொரு விற்பனைக்கும் அறவிடப்படும்.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட, நூற்றாண்டுக்கும்
மேல் மக்கள் நன்மதிப்புப் பெற்ற, இலங்கையின்
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

11-555

---

**ஆதனம் ஏலவிற்பனை**

கொழும்பு மாவட்ட நீதிமன்றில்

கொழும்பு 2, யோர்க் வீதி, இல. 76 இல் அமைந்துள்ள நேஷன்ஸ் ரிரஸ்ட் வங்கி பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனி மற்றும்/அல்லது பத்தரமுல்லை, கடுவளை வீதி, இல. 15 இல் அமைந்துள்ள கிளை அலுவலகம்.

................................ வாதி.

வழக்கு இல. 17875
எம். பி.

மற்றும்

1. கடுவளை, வெலிவிட்ட வீதி, இல. 488 ஐச் சேர்ந்த கட்டுகம்பளகே தோன தயா சந்திரகாந்தி
2. பெல்மதுளை, பிரதான வீதி, இல. 178 ஐச் சேர்ந்த சிங்கக்குட்டி ஆச்சிலா அத்து கோறளகே மில்ரன் பீரிஸ்

........................ பிரதிவாதிகள்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றினால் மேற்கூறப்பட்ட வழக்கில் குறிப்பிடப்பட்ட உத்தரவிற்கமைய, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகள், ஆறு இலட்சத்து எண்பதாயிரத்து முந்நூற்று அறுபத்தேழு ரூபா பதினொரு சதம் (ரூ. 6,80,367.11) கொண்ட தொகை

மற்றும் ஆறு இலட்சத்து எழுபத்தெண்ணாயிரத்து நூற்றுதொண்ணூற்றெட்டு ரூபா ஐம்பத்துநான்கு சதம் (ரூ. 6,78,198.54) தொகைக்கு 06.03.2006 ஆந் திகதியிலிருந்து உத்தரவு பிறப்பித்த திகதி வரை மற்றும் உத்தரவு பிறப்பித்த திகதியிலிருந்து மொத்தத் தொகை மீது ஆண்டிற்கு 33% வட்டியும் செலுத்தும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்குச் சொந்தமான ஆதனம், வாதிக்கு மேற்கூறப்பட்டவாறு வரவேண்டியவைகளை அறவிடும் பொருட்டு கையொப்பமிடப்பட்டும் கடப்பட்டும் இருக்கின்றது. ஆகவே, இவ்வழக்கில் எனக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனைக் கட்டளைக்கமைய, கீழே விவரிக்கப்பட்டுள்ள மேல் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகளுக்குச் சொந்தமான ஆதனத்தை 14 திசெம்பர், 2011 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு மேற்கூறப்பட்ட இடத்தில் பகிரங்க ஏலம்மூலம் நான் விற்பனை செய்வேன்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கடுவளை நகரிலிருந்து புதிய கண்டி வீதி வழியே தெல்கொடை சந்திவரை சென்று, கிரிதர வீதிக்குத் திரும்பி தொம்பே நகர் வரை செல்லவும். விற்பனைக்குரிய இவ்வாதனம் தொம்பே பஸாரின் அந்தத்தில் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

கொள்வனவாளர் ஏலமுடிவில் உடனே ஏலதாரருக்கு பின்வருவனவற்றை காசாகச் செலுத்த வேண்டும் :-

கொள்வனவு விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ; கொள்வனவு விலையின் மிகுதி 75% ஐ 30 நாட்களுக்குள் வழக்கிற்கு பற்றுவைக்க வேண்டும். மேலும் கொள்வனவாளர், ஏலதாரரின் தரகாக கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ஐ ஏலதாரருக்கு காசாகச் செலுத்த வேண்டும் ; உள்ளூர் அதிகார சபைக்கு வரியாக 1% (ஒரு வீதம்) ; மேற்கூறப்பட்ட ஏலவிற்பனையின் பொருட்டு ஏலதாரரினால் உறப்பட்ட செலவு விலைமதிப்பீட்டுக் கட்டணமாக இருக்கின்ற 0.5%.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, கங்கொடபற்று, தொம்பே பிரதேசத்தின் (இல. 3- தொம்பே உப அலுவலகம்) எல்லைகளுக்குள் தொம்பே கிராமத்தில் அமைந்துள்ளதும் "கஹட்டகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. வியனகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 29.11.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2690ஏ இல் குறிப்பிடப்பட்ட துண்டு 1சீ முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து எல்லைகளாவன- வடக்கு : எஸ். எஸ். சோமதாசவின் காணி ; கிழக்கு : எஸ். ஏ. சந்திராவதியினால் சொந்தமாக்கப்பட்ட துண்டு சீ ; தென்மேற்கு : துண்டு 1டி (பிரதான வீதிக்கான ஒதுக்கு) ; மேற்கு : துண்டு 1பி. இது இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப்பதிவகத்தில் பக்கம் டி29டி/252 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு.- நேஷன்ஸ் ரிரஸ்ட் வங்கி ப. வ. க., சட்ட சம்பந்தமான பிரிவு, இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 1.

டபிள்யூ. எம். விக்கிரமரட்ன,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 220/5, கம்பஹா வீதி,
யக்கல.
தொலைபேசி இல. : 033-2222568 அல்லது
071-8208360, 011-2787314.

11-367

---

## ஆதனம் ஏலவிற்பனை

நுகேகொடை, எஸ். டீ. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை,
இல. 134/2 ஐச் சேர்ந்த குஸ்தின்னவடு
லக்மினி உதேஷிகா பெரேரா

வழக்கு இல. 10899/ ........................ வாதி.
பாகப்பிரிவினை

மற்றும்

ஹோமாகமை. பிட்டிபன தெற்கு, மொறகஹஹேன
வீதி, தஹம் மாவத்தை, இல. 548/4 ஐச் சேர்ந்த
சுபசிங்ஹ ஆரச்சிகே லெஸ்ரர் டயமன் பெரேரா

............................ பிரதிவாதி.

இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தின் ஒவ்வொரு அரைப்பங்கும் வாதிக்கும் பிரதிவாதிக்கும் உரித்தாக்குகின்றதென வெளிப்படுத்துகின்ற மேற்கூறப்பட்ட வழக்கில் ஒரு சமவாத உத்தரவு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பின்னர், இரு பகுதியினருக்குமிடையில் தங்கள் உரிமைகளைப் பகிர்ந்து ஆதனத்தை விற்பனை செய்வது எனும் தீர்மானத்தின்மீது, பகிரங்க ஏலத்தில் வீட்டையும் ஆதனத்தையும் விற்பதற்கும் இவ்வழக்கின் பற்றுக்கு நீதிமன்றத்தில் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை வைப்பிலிடுவதற்கும் நீதிமன்றினால் விற்பனைக் கட்டளை எனக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, சொல்லப்பட்ட விற்பனை கட்டளைக்கமைய, இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் 12, திசெம்பர் 2011 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கூறப்பட்ட இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

கொள்வனவாளர், கொள்வனவு விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ஐ காசாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும். எஞ்சிய 75% (எழுபத்தைந்து வீதம்) 30 நாட்களுக்குள் நீதிமன்றுக்கு செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் கொள்வனவாளர் ஏலதாரரின் தரகாக 2 1/2% (இரண்டரை வீதம்) ஐ ஏலதாரருக்கு காசாகச் செலுத்த வேண்டும். உள்ளூர் அதிகாரசபை வரி 1% (ஒரு வீதம்) ; மேற்கூறப்பட்ட விற்பனை தொடர்பாக ஏலதாரரினால் உறப்பட்ட செலவுகள் மற்றும் விலைமதிப்பீட்டு கட்டணம் 0.5% (சைபர் தசம் ஐந்து வீதம்).

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பிலிருந்து ஹைலெவல் வீதியில் ஹோமாகமை இராணுவ தலைமையகத்தை அடையும் முன்னர், மொறகஹஹேன வீதிக்கு வலப்பக்கம் திரும்பி, ஏறக்குறைய 5 கி. மீ. செல்லவும். பிட்டிபன தெற்கில் தஹம் மாவத்தைக்குத் திரும்பவும். ஏறக்குறைய 600 மீற்றர் செல்ல விற்பனைக்குரிய ஆதனம் இடப்பக்கத்தில் உள்ளது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, உடுகஹபற்று, பிட்டிபன தெற்கு என அழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ளதும் "மஹ கெலே மூக்கலான பிட்டிபன மூக்கலான" என அழைக்கப்படும் காணி முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பி. ஞானசிறி அவர்களால் தயாரிக்கப்பட்டு 30.07.2009 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 864 இற்கமைய பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது- வடக்கு : வீதி ; கிழக்கு : ருக்மலேயைச் சேர்ந்த அனுருத்த தேரர் அவர்களால் உரிமை கோரப்படும் மஹகெலே மூக்கலான ; தெற்கு : கே. ஏ. தயாரத்ன மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்படும் காணி ; மேற்கு : கே. ஏ. தயாரத்ன மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்படும் காணி. இது முப்பத்தொன்பது தசம் ஏழு மூன்று பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 39.73பே.) விஸ்தீரணமுடையது.

டபிள்யூ. எம். விக்ரமரத்ன,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 220/5, கம்பஹா வீதி,
யக்கலை.
தொலைபேசி இல. : 033-2222568, 071-8208360, 011-2787314.

11-368

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.